வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.04.2025 சனிக்கிழமை இதழ் : 117 பக்கங்கள் : 12




# 'ஏக்கிய ராஜ்ஜிய' முறையை தமிழரசு நிச்சயம் எதிர்க்கும்!

## பதில் தலைவர் சிவஞானம் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 26


**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, 'ஏக்கிய ராஜ்ஜிய' முறைமையை ஏற்றுக்கொள்ளமாட்டாது எனவும், அதனை முழு வீச்சில் எதிர்க்கும் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் நேற்று அறிவித்தார்.**

ஏக்கிய ராஜ்ஜிய முறைமையை, தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக் கொண்டு விட்டதாக, அண்மைய தேர்தல் பரப்புரை கூட்டங்களில், எதிர்த்தரப்பினரால் தெரிவிக்கப்படும் கருத்து தொடர்பில் ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சி, ஒற்றையாட்சி முறைமையையோ 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற முறைமையையோ ஏற்றுக் கொள்ளமாட்டாது மட்டுமல்ல, அவற்றை முழு வீச்சில் எதிர்க்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறு ஏதாவது முன்மொழிவு அரசினால் முன் வைக்கப்பட்டால்,

11



## கீரிமலை ஜனாதிபதி மாளிகை பயன்பாடு குறித்து கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 26

கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை பார்வையிடும் விஜயம் ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது. அந்த கட்டடத்தின் எதிர்காலப் பயன்பாடு குறித்தும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் இதன் போது விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தில், நகர அபிவிருத்தி, கட்டுமான மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக, கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம்

11

# மீனவர் சங்க தலைவரை தாக்கிய அமைச்சர் சந்திரசேகரின் சாரதி!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 26

கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் சாரதி முல்லைத்தீவு - கேப்பாபிலவு மீனவர் சங்கத் தலைவரான சுகிந்தன் என்பவரை தாக்கியுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்

11

# உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் ஜே.வி.பியினர் பொய்ப் பிரசாரங்கள்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 26

உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும், ஜே.வி.பியினர் பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர் என, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் நேற்று அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் தெற்கில் மட்டுமல்லாது வடக்கு கிழக்கிலும் தாங்கள் தான் பெரிய கட்சி என்றும் தமக்கே தமிழ் மக்களும் ஆணை வழங்கி உள்ளதாகவும் ஜே.வி.பியினர் தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

உண்மையில் வடக்கு-கிழக்கிலுள்ள 19 பாராளுமன்ற உறுப்பினர்களில் 8 பேரே ஜே.வி.பியினர். ஏனையவர்களில் தமிழரசுக் கட்சி 8 பேர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 1 சுயேச்சைகுழு 1 என்ற வாறாகவே ஆசனங்கள் உள்ளன.

இவ்வாறிருக்கையில் எதனடிப்படையில் தாம் தான் பெரிய கட்சி என்றும்

11

## மீனவ தலைவர் தாக்குதல் பற்றி என்னிடம் எதுவுமே கேட்காதீர்!

### கூறினார் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஏப். 26

கடற்தொழில் அமைச்சரின் சாரதியினால் மீனவர் சங்கத் தலைவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான கேள்வியைத் தன்னிடம் கேட்கவேண்டாம் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதிக்கு நேற்று முன் தினம் தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு

11

## மோடியுடன் தொலைபேசியில் நேற்று உரையாடினார் அநுர!

கொழும்பு, ஏப். 26

அண்மையில் 26 பேர் கொல்லப்பட்ட இந்தியாவின் காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் சுமார்

11

## காணாமற்போனோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்று போராட்டம்!

கிளிநொச்சி, ஏப். 26

கிளிநொச்சியில் நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று வெள்ளிக்கிழமை மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இந்தப் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு முன்பாக முன் னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின்

11

## இணையக் குற்றவிசாரணைப் பிரிவு யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்தில் நேற்று இணையக் குற்றவிசாரணைப் பிரிவு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் இணையக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வந்தன. இதனால் இணையக் குற்றங்கள் தொடர்பான

11

## இலங்கைக்கு வருகின்றது ஐரோப்பிய ஒன்றியக் குழு

கொழும்பு, ஏப். 26

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பான நிபந்தனைகள் குறித்த முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இந்தக் குழு எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்

11

## இலஞ்ச ஆணைக்குழுவில் முன்னிலையாகும் ரணில்

கொழும்பு, ஏப். 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்குமூலம் அளிக்க வருவதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தனது சட்டத்தரணி மூலம் ஆணைக்குழுவுக்குத் தகவல் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, அன்றைய தினம் பிற்பகல் 02.00 மணிக்கு இலஞ்ச

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடமைப்பு அமைச்சர் அநுர யாழ்ப்பாணத்துக்கு விஜயம்!

## பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் ரி. பி. சரத் ஆகியோர் நேற்றுக் காலை 09.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை அவர்களைச் சந்தித்து மீள்குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ச.ஸ்ரீபவானந்தராஜா, அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரட்ன, மேலதிகச் செயலாளர் எம். எம். நயமுதீன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை வரவேற்று, யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்காக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக இவ்வாண்டு 1258 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டதுடன், மீள்குடியேற்ற செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் குறித்தும் விவரித்தார்.

வீட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபா 1 மில்லியன் நிதி போதாமையாகவுள்ளதாகவும் அதனை ரூபா 1.5 மில்லியனாக அதிகரிக்க ஆவன செய்யுமாறும் கோரிக்கை முன்வைத்ததுடன், இதுவரை விடுவிக்கப்பட்ட காணி மற்றும் விடுவிக்கவேண்டிய காணிகளின் விவரங்கள், தெல்லிப்பளை பிரதேச உள்ளக வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் வசதிகள், மின்சார இணைப்பு வசதிகள் தொடர்பாகவும் விளக்கமளித்து அது தொடர்பான கோரிக்கைகளும் அரசாங்க அதிபரால் முன்வைக்கப்பட்டன.


இதன்போது கருத்து தெரிவித்த நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றிலொரு பங்கு மீள்குடியேற்றம் உட்பட ஏனைய திட்டங்களுக்காக யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தேவைப்பாடுகளை சாதகமாக பரிசீலிப்பதாகவும் குறிப்பிட்டு அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டங்களைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்க சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் இணைந்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஒதுக்கப்படும் நிதிகளை இவ்வாண்டுக்குள் உரிய திட்டங்களுக்குச் செலவு செய்து முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறும் கோரினார்.

(அ-05)

# தெல்லிப்பழையில் நூல் வெளியீடு





யாழ்ப்பாணம், ஏப். 26

ஈழத்து தமிழியல் த.சண்முகசுந்தரம் தமிழியல் சுவடுகள் நூற்றாண்டு விழாக்கால நூல் வெளியீடு நேற்று தெல்லிப்பழையில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் தலைமையில் இந்த நூல் வெளியீடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. வெளியீட்டு உரையை அளவெட்டி அருணோதயா கல்லூரியின் ஆசிரியர் சி.ரமேஷ் ஆற்றினார். முதல் பிரதியை ச.அருள்முருகனார் வழங்க அதனை நிகழ்வின் தலைவர் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ-05)

# விபத்தில் பொலிஸ் அலுவலர் பலி!

வவுனியா, ஏப். 26

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பாரவூர்தி ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.


விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் லக்ஸ்மன் பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே மரணமடைந்தார்.

அவரது மரணம் தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி க.ஹரிபிரசாத் ஆகியோர் முன்னெடுத்தனர்.

(அ-10)

# திக்கம் வடிசாலை பனை அபிவிருத்தி சபையால் வடமராட்சி கொத்தணியிடம் நேற்று கையளிப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 26

சுமார் முப்பது ஆண்டுகளாக இயங்காமலிருந்த திக்கம் வடிசாலை மீண்டும் வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் நேற்று கையளிக்கப்பட்டது .

கைதடி பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன், திக்கம் வடிவசாலை வளாகத்தில் வைத்து பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் வடமராட்சி கொத்தணியிடம் உத்தியோகபூர்வமாக கடிதத்தைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி, தென்மராட்சி உட்பட யாழ். மாவட்டத்தின் பல்வேறு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், பணிப்பாளர்கள், பனை அபிவிருத்திச் சபை பணிப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காலத்தில் குறித்த திக்கம் வடிசாலை தென்னிலங்கையிலுள்ள ஒருவருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டே நேற்று வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் கையளிக்கப்பட்டது.

(அ-05)

# அராலியில் சிறுவர் சந்தை



யாழ்ப்பாணம், ஏப். 26

அராலி இந்து அறநெறி சிறுவர் பாடசாலையில் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலையின் பொறுப்பாசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கல்பனா கலந்து சிறப்பித்தார்.

இதன்போது மாணவர்கள் பல்வேறு விதமான பொருட்களை சந்தைப்படுத்தினர். இந்த சந்தை நிகழ்வில் பெற்றோர், ஊர் மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறுவர்களிடம் பொருட்களை வாங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர்.

(அ-05)

# வடமராட்சி கிழக்கில் 85 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி நேற்று வழங்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஏப். 6

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் கிராமங்களில் கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 85 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில் இவ்வாறு பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் ச.திரவியராசா, ஆளுநர் சபை உறுப்பினர் ந.நாகேஸ்வன், கரவெட்டி பிரிவுத் தலைவர் சி.ரகுபரன், பிரிவு செயலாளர் த.பகிதரன் ஆகியோருடன் தொண்டர்கள், பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.04.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வடக்கிலுள்ள திருடர்கள் யார்?

அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்கிலுள்ள கள்வர்களையும் கைது செய்வோம் என்று அறிவித்திருக்கின்றார். திருடர்கள் யாராக இருப்பினும், அவர்கள் எவ்வாறான பொறுப்புக்களில் இருப்பினும் அவர்களை அம்பலப்படுத்த வேண்டும் என்பதில் மாறுபட ஒன்றுமில்லை. அதனை எந்த அரசாங்கம் முன்னெடுத்தாலும் அதனை ஆதரிக்கத்தான் வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு தமிழ் மக்களும் வாக்களித்தமை இந்தப் பின்புலத்தில்தான். தேசிய மக்கள் சக்தியால் அரசியல் தீர்வை வழங்க முடியும் என்னும் நம்பிக்கையில் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை.

ஜனநாயக விதிகளின் அடிப்படையில் நோக்கினால், அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுவது போன்று, வடக்கிலும் தேசிய மக்கள் சக்திதான் பிரதான கட்சியென்று கூறினால் அதில் தவறில்லை. ஆனால் தமிழ் மக்கள் எவ்வாறானதொரு பின்னணியில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர் என்பதை ஜே.பி.யின் தலைவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் பேசிய கட்சிகள் ஒன்றுக்கொன்று எதிரிகள் போன்று மோதிக் கொண்டமை, தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்களே ஒருவருக்கு எதிராக இன்னொருவர் சதிசெய்யும் அரசியலை முன்னெடுத்தமை, தமிழரசுக் கட்சியின் உள் விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றமை, இந்தப் பின்புலத்தில் ஒரு கட்சிக்குள் இருப்பவர்களே - குறிப்பாக இலங்கை தமிழரசு கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்கவிடம் மதுபான குத்தகைப் பத்திரத்தை அரசியல் கையூட்டாக பெற்றுக் கொண்டதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தமை - கிளிநொச்சியில், மன்னாரில் மட்டக்களப்பில், திருகோணமலையில் புதிய மதுபான சாலைகள் திறக்கப்பட்டமைக்கு பின்னால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டமை - இவற்றால் தமிழ் மக்கள் அரசியல்வாதிகள் மீது அதிருப்தியும் வெறுப்பும் கொண்டனர். ஏற்கனவே தமிழ்த் தேசிய கட்சிகளின் போலியான அணுகுமுறைகளால் அதிருப்தியுற்றிருந்த மக்களை, இவ்வாறான நடவடிக்கைகளோ வெறுப்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றது. இதனுடன், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக ஒன்றுபட்ட கட்சிகள் தேர்தலில் பிரிந்து மோதிய விடயமும் தமிழ் மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில்தான் நாடாளுமன்றத் தேர்தலின் போது, தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக திரும்பினர். குறிப்பாக அநுரகுமார திஸநாயக்க தொடர்பில் காணப்பட்ட மரியாதையும் நல்லபிப்பிராயங்களும்தான், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களின் தகுதியை பார்க்காது மக்களை வாக்களிக்கத் தூண்டியது.

இந்தப் பின்புலத்தில்தான் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கிலும் பெரிய கட்சியாக வரமுடிந்தது. இந்தப் பின்னணியை அமைச்சர் பிமல் ரத்நாயக்க மறந்துவிடக் கூடாது. ஆனால் அநுரகுமார ஆட்சிக்கு வந்தவுடன், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மதுபான சாலை குத்தகை விபரங்களை மக்களுக்குச் சொல்வார் என்று எதிர்பார்த்தனர் ஆனால் இன்றுவரையில் அது நடக்கவில்லை, இந்த நிலையில் வடக்கில் கள்வர்களை கைது செய்யப் போவதாக கூறுவதை எவ்வாறு மக்கள் நம்புவார்கள்?

முதலில் எந்தெந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊடாக வடக்கு கிழக்கில் மதுபான சாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன, என்பதை மக்களுக்கு கூறுங்கள்.

# யாழ்.பாஷையூரில் கடற்றொழில், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். பாசையூரில் கடற்றொழில், விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அமைச்சர், யாழ். பாஷையூருக்கு நேற்றுக் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார். பாஷையூர் மீன் சந்தைக்கு சென்று அதனை பார்வை யிட்டதன் பின்னர், இறங்கு துறைக்கும் சென்று கண் காணிப்பில் ஈடுபட்டார். அத்துடன், பாசையூர் கடற் றொழில் சங்கத்துடனும் கலந்துரையாடினார்.

கடற்றொழிலாளர்கள் மற்றும் மக்களால் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

அதன்பின்னர் பாஷையூரிலுள்ள சென். அன்ரனிஸ் மைதானத்துக்கும் அமைச்சர் சென்றிருந்தார். மைதானத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியையும் வழங்கினார்.

(அ)

# யாழ்ப்பாண நகர மண்டபத்தை நேற்று பார்வையிட்ட நகர அபிவிருத்தி அமைச்சர்

யா ழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட நகர அபிவிருத்தி, நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணா திலக மற்றும் பிரதிய மைச்சர் டி. பி. சரத் ஆகியோர் நேற்று காலை யாழ்ப்பாண நகர மண்டபத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.



இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீபவானந்தராஜா, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நகர அபிவிருத்தி சபை அதிகாரிகள், யாழ் மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்றனர்.

(அ)

# மூளாயில் சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

மூளாய், பொன்னாலை கிராமங்களில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், சோட்டோகான் கராத்தே போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்கு தெரிவான மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.



அத்துடன் மூளாயில் உள்ள மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தில் முதலாவது தையல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த மாணவர்களினால் உருவாக்கப்பட்ட தையல் பொருட்களின் கண்காட்சியும் நடைபெற்றது.

மூளாய் வதிரன்புலோ விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. பின்னர் விருந்தினர்களும் மாணவர்களும் மூளாய் வதிரன்புலோ ஆலயத்தில் இருந்து மண்டபம் வரை மங்கள வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து விருந்தினர்களது உரை, மாணவர்களது கலை நிகழ்வுகள், மாணவர்களுக்கான கௌரவிப்பு போன்றன இதன்போது இடம்பெற்றன.

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்பார்த்த வேலைகள் தாமதமாக முடியும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி**
சகோதர வகையில் உதவிகள் உண்டு. மனைவிவழி உறவினர்கள் முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் நட்பாக வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைப்பீர்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் ரசனையை புரிந்து கொள்வீர்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புது வேலை அமையும்.வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியமான முடிவுகள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் எதிஉத்தியோ கத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் லாபம் குறையும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

# மரத்தை வெட்டியதால் வியாபாரிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஏப். 26

கொடிகாமம் சந்தைக்கு அருகாமையில் உள்ள மரத்தை வெட்டியதால் வியாபாரிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி இரவு சாவகச்சேரி பிரதேச சபையினர் மரத்தை வெட்டியதாக வியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது வெப்ப நிலை மிகவும் அதிகரித்து காணப்படுகிறது. இந்த நிலையில் மரங்கள் நிற்பதன் மூலம்தான் ஓரளவேனும் வெப்பத்தின் தாக்கம் குறைவாகவுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் மக்களின் கோரிக்கையை மீறி மரத்தை வெட்டியதாக குற்றஞ்சாட்டினர்.

சந்தையில் உள்ள மலசல கூடங்களும் பயன்படுத்த முடியாமல் மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுகின்றது எனவும் அவற்றினை சாவகச்சேரி பிரதேச சபையினர் சுத்தம் செய்வதில்லை என்றும் வியாபாரிகள் கூறினர்.

அத்துடன் சந்தையில் சேரும் கழிவுகளை உரிய முறையில் பிரதேச சபையினர் அகற்றுவதில்லை என்றும் குற்றஞ்சாட்டினர்.

மக்களுக்கு சரியான முறையில் சேவைகளை வழங்காத உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கூறியுள்ளார். எமது இந்தப் பிரச்னைக்கு அவர் எடுக்கப்போகின்ற நடவடிக்கை என்ன எனவும் மக்களும் வியாபாரிகளும் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-05)

உரிய வெப்ப நிலையை பேணாது

# யோக்கட் கொண்டு சென்றவருக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்தில் உரிய வெப்ப நிலையை பேணாது யோக்கட்களை வாகனத்தில் எடுத்து சென்ற சாரதிக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்று 30,000 ரூபாய் அபராதம் விதித்ததுடன், கைப்பற்றிய யோக்கட்களையும் அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

யோக்கட்களை 06 செல்சியஸ் வெப்ப நிலையில் கூலர் வாகனத்தில் எடுத்து செல்ல வேண்டிய நிலையில் அதன் வெப்ப நிலையை அதிகரித்து 18 செல்சியஸ் வெப்ப நிலையில் கடைகளுக்கு விநியோகிக்க கொண்டு சென்ற வாகனச் சாரதிக்கு எதிராக அராலி பொதுச் சுகாதார பரிசோதகர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது , சாரதி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து சாரதியை கடுமையாக எச்சரித்த மன்று 30 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிட்டதுடன், கைப்பற்றப்பட்ட யோக்கட்கப்கள் அடங்கிய 200 பக்கெட்களையும் அழிக்குமாறும் உத்தரவிட்டது. (எ)

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 26

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான கசோலை வழங்கும் நிகழ்வு யாழில் நடைபெற்றது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்ட நடைமுறைப்படுத்தலில் 2024 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் பண சேகரிப்பு அடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பருத்தித்துறை, நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்கள் பெற்றிருந்ததுடன், அங்கத்தவர்கள் இணைப்பு அடிப்படையில் தேசிய விருதுக்கு நல்லூர், பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

மேலும், இம்முறை ஓய்வூதியத் திட்ட நடைமுறைப்படுத்தலில் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணம் மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்ட நடைமுறைப்படுத்தலை சிறப்பாக மேற்கொண்ட உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான காசோலைகள் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப்பாளர் த.சங்கர் கலந்து கொண்டார். (எ)

# புகைபிடித்தவாறு மீன் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்கு ரூ.10ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஏப். 26

புகைபிடித்தவாறு மீன் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சந்தைப் பகுதியில் புகைபிடித்தவாறு மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர் கி. அஜந்தன், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, மன்றில் முன்னிலையாகியிருந்த மீன் வியாபாரி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து, வியாபாரியை கடுமையாக எச்சரித்த மன்று 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகிறார் ரணில்!

கொழும்பு, ஏப். 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாவார் என்று அவரின் சட்டத்தரணி குறித்த ஆணைக்குழுக்கு அறிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு விசாரித்து வந்தது.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க கடந்த 10 ஆம் திகதி சாமர சம்பத் தசநாயக்கவின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக கடந்த 17ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆனால், புத்தாண்டு கொண்டாட்டம் காரணமாக முன்னிலையாக முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதையடுத்து, நேற்றைய தினம் அவரை முன்னிலையாகுமாறு இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு அழைப்பு விடுத்தது. ஆனால், தனது சட்டத்தரணி வெளிநாடு சென்றுள்ளமையால் அவர் நாடு திரும்பிய பின்னரே விசாரணைக்கு முன்னிலையாவேன் என்று ரணில் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்தே, ரணில் நாளை மறுதினம் முன்னியாவதாக அவரின் சட்டத்தரணி அறிவித்துள்ளார். (ஐ)

# புனித தந்ததாதுவை தரிசிக்க வந்த நால்வர் உயிரிழந்தனர்!

**- கண்டி தேசிய மருத்துவமனை பணிப்பாளர் -**



கண்டி, ஏப். 26

**புனித தந்த தாதுவை தரிசிப்பதற்காக சிறீ தலதா வழிபாட்டில் பங்கேற்ற நால்வர் உயிரிழந்தனர் என்று கண்டி தேசிய மத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் இரேஷா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.**

இறந்த நால்வரும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்தார் எனவும் தெரிய வந்துள்ளதாகவும் மருத்துவர் தெரிவித்தார்.

மற்றைய மூவரின் இறப்பு தொடர்பில் அறிவதற்காக அவர்களின் உடல்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதனிடையே, சிறீ தலதா வழிபாட்டுக்காக வந்தவர்கள் சுமார் 300இற்கும் மேற்பட்டவர்கள் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் நீரிழப்பு காரணமாக மயக்கமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தலதா மாளிகைக்கு அண்மையாக 9 சுகாதார மையங்கள் செயல்படுகின்றன.

கடந்த 7 நாட்களில் அங்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். வழிபாட்டுக்காக வரும் பக்தர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களை அழைத்துச் செல்ல 7 சுவசெரிய அம்புலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வாக்காளர் அட்டை விநியோகம் இன்றும் நாளையும் நடைபெறும்

கொழும்பு, ஏப். 26

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்றும் நாளையும் விநியோகிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் இறுதித் தினம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையாகும்.

செவ்வாய்க்கிழமைக்கு பின்னர், வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்காக தேருநர் இடாப்பில் பதிவு செய்த முகவரிக்கு உரிய தபால் நிலையத்துக்கு சென்று தங்கள் எது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறீ தலதா மாளிகையில் வேடுவர்கள் தேன் பூசை!



கண்டி, ஏப். 26

கண்டி தலதா மாளிகையில் வேடுவர் தலைவர் தம்பானே ஊறுவலிகே அத்தோ தலைமையிலான குழுவினர் தேன் கொண்டு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வருடந்தோரும் வேடுவர்களால் தேன் பூசை நடத்தப்படுவது சம்பிரதாயம். இதன் பிரகாரமே நேற்றுமுன்தினம் இந்த பூசை நடைபெற்றது.

தாம் வழமை போன்று இம்முறையும் தந்த தாதுவின் ஆசீர்வாதம் வேண்டி வருகை தந்து சம்பிரதாய பூசைகளில் ஈடுபட்டதாக வேடுவர் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# வீதி விபத்தில் பெண் மரணம்

கொழும்பு, ஏப். 26

வீதியில் நடந்து சென்ற பெண்ணை மோட்டார் சைக் கிள் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் நடந்து சென்ற பெண்ணும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தவர் வலகம்முல்லை பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடைய பெண்ணாவர்.

இந்த விபத்துக் குறித்து குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# புகழ்பெற்ற இசைக்குழு நாட்டை வந்தடைந்தது!

கொழும்பு, ஏப். 26

இளைஞர், யுவதிகள் மத்தியில் மிகவும் பிரபலமான அமெரிக்காவின் போய்ஸ் அவென்யூ இசை குழுவினர் நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரத்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக இந்த இசைக்குழுவினர் நாட்டை வந்தடைந்தனர்.

இந்த இசைக் குழுவினர் நாட்டில் இசை நிகழ்ச்சி ஒன்றையும் நடத்தவுள்ளனர். இந்த இசை நிகழ்ச்சி கொழும்பில் உள்ள வோட்டர் ஏஜ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது என்றும் தெரிய வருகிறது. (ஐ)

கட்டுநாயக்கா கொலை முயற்சி:

# தப்பியோடிய துப்பாக்கிதாரி நேற்று முன்தினம் கைதானார்

கொழும்பு, ஏப். 26

கட்டுநாயக்காவில் வர்த்தகர் ஒருவரை சுட்டுக் கொல்ல முயன்ற சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்கா - ஆண்டியம்பலம பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வர்த்தகர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கி செயலிழந்தமையால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. அந்தச் சமயம் வர்த்தகர் துப்பாக்கிதாரியையும் அவருடன் வந்தவரையும் தாக்கினார். இதைத் தொடர்ந்து, துப்பாக்கிதாரியும் அவரின் உதவியாளரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இவர்கள் தப்பியோடும் போது, ஒருவருக்கு காலில் அடிபட்டதால் ஓட முடியவில்லை. இந்த நிலையில் சம்பவமறிந்து அங்கு வந்த பொலிஸாரிடம் அவர் சிக்கினார். இந்த நிலையில் தப்பிச் சென்ற துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

# பிக்குவின் உடையில் நுழைந்தவர் கைது!

கொழும்பு, ஏப். 26

பௌத்த பிக்குவின் உடையில் தலாதா மாளிகைக்குள் நுழைய முயன்ற பாடசாலை மாணவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கம்பஹா, கிரலவெல பகுதியை சேர்ந்த18 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பௌத்த பிக்குகளுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை வழியாக தலதா மாளிகைக்குள் நுழைய முயன்றபோது அவர் கைது செய்யப்பட்டார்.இந்த சம்பவம் குறித்து கண்டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிப்பாயை ஏசிய பொலிஸ் அதிகாரி குறித்து விசாரணை!

கொழும்பு, ஏப். 26

கண்டி தலதா மாளிகையில் புத்தரின் தந்த தாதுவை காட்சிப்படுத்தும் "சிறீ தலதா வழிபாடு" நிகழ்வுக்கு செல்லும் வரிசைக்கு அருகில் நின்ற படைசிப்பாய் ஒருவரை பொலிஸ் அதிகாரி ஏசுவது போல் வெளியான காணொலி தொடர்பில் விசாரணை நடத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த காணொலி பதில் பொலிஸ்மா அதிபர் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கண்டி மாவட்ட இலக்கம் 1இற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

விசாரணையில் குற்றம் இழைத்துள்ளார் என்று கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி மீது கடும் ஒழுகாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்டங்களை வகுத்தேனும் இனவாதத்தை தோற்கடிப்போம்



## ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, ஏப். 26

**புதிய சட்டங்களை வகுத்தேனும் நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.**

மேலும், "நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிங்கள மக்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ளனர். முஸ்லிம் மக்கள் சிங்கள வேட்பாளர்க ளுக்கு வாக்களித்துள்ளனர். பிளவுபட்டிருந்த நாட்டையும், நாட்டு மக்களையும் நாம் ஒன் றிணைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஆட்சி யமைத்தவர்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக இனவாதத் தைப் பரப்பினார்கள். சிங்கள, முஸ்லிம் பிரச்னையை ஏற்படுத் தினார்கள்.

இனவாத அமைப்புகளை வலுப்படுத்தினார்கள். அளுத் கமையில் தாக்குதல் நடத்தப் பட்டதாகச் செய்திகள் வெளி வந்தன. திகனையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. தற்போது இவ் வாறான செய்திகளுக்கு இட மில்லை.

எமது நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஒருபோதும் இனவா தத்துக்கு இடமளிக்கப்போ வதில்லை எனும் உறுதிமொ ழியை வழங்குகின்றோம். இனவாதத்தைத் தோற்கடிப்ப தற்கு நாட்டில் தற்போது நடை முறையிலுள்ள சட்டம் போது மானதாக இல்லாத நிலையில், புதிதாகச் சட்டத்தை வகுத்தே னும் இனவாதத்தைத் தோற்க டிப்போம் - இவ்வாறு நேற்று முன்தினம் புத்தளத்தில் நடந்த மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

# மகிந்தவின் பாதுகாப்பை அரசு குறைத்துவிட்டது!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக் கப்பட்டுள்ளது. வீட் டுக்கு கடி தம் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரா அர சாங்கம் இவ்வா றான தீர்மானங் களை எடுக் கிறது என்ற சந்தே கம் உள்ளது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாரா ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை தனது கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை சந்தித்து பேசியபோதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

மேலும், தேசிய பாது காப்பை உறுதிப்படுத்தியுள் ளோம். பொதுமக்கள் அச்ச மில்லாமல் இருக்கலாம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஆனால், பகி ரங்கமாக தற்போது துப்பாக் கிச்சூட்டு சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இந்த நான்கு மாத காலப்பகுதி யில் மாத்திரம் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் மாத்திரம் 26 பேர் வரை உயிரிழந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. கடிதம் வீட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த மகிந்த ராஜபக்ஷவை அரசாங்கம் ஏன் இலக்காகக் கொண்டு செயல்படுகிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரா அரசாங்கம் இவ்வாறான தீர்மா னங்களை எடுக்கிறது.

புதுக் கடை நீதிமன்றத்தில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக தேடப் படும் பெண் இதுவரை யில் கைது செய்யப் படவில்லை.

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான முரண் பாடுகள் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்துகிறது. பாதாள உலகக் குழுவினராக இருந்தா லும் அவர்களை கொலை செய் யும் உரிமை எவருக்கும் கிடை யாது. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ)

# போப் பிரான்சிஸ் மறைவு: சஜித் பிரேமதாஸ இரங்கல்



கொழும்பு, ஏப். 26

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வத்திக்கான் தூதரகத்துக்கு சென்று மறைந்த திருத்தந்தை பிரான்சிஸூக்காக இரங்கல் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள வத்திக் கான் தூதரகத்துக்கு சென்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை இலங்கைக் கான வத்திக்கான் அப்போஸ் தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வேயை சந்தித்து இரங் கல் தெரிவித்தார்.

இதன், பின்னர், அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் குறிப்பு எழுதினார்.

(ஐ)

# அண்ணனை அடித்தே கொன்ற தம்பி!

கொழும்பு, ஏப். 26

அண்ணனை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டில் தம் பியை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

களுத்துறை - பாணந் துறை பகுதியில் இந்தச் சம்பவம் நேற் றுமுன்தினம் இரவு இடம்பெற் றுள்ளது.

இந்த சம்பவத்தில் 39 வய துடைய அண்ணனே கொலை செய்யப்பட்டார். அண்ணனுக் கும் தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்குக் கார ணம் என்று தெரிவிக்கப்பட் டது.

இந்த சம்பவத்தின் சந் தேக நபர் பின்வத்தை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தமையை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

(ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து 302 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஏப். 26

உள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தல் தொடர்பில் நேற்று காலை வரையான காலப்பகுதியில் 302 முறைப் பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங் களை மீறியமை தொடர்பில் 237 முறைப்பாடுகளும் தேர்த லுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 65 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை, தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 27 வேட்பாளர்களும் 106 சந் தேக நபர்களும் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைக ளுக்காக சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்ட 26 வாக னங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரி வித்துள்ளது.

(ஐ)

# மகாநாயக்க தேரர்களை சந்தித்தார் ஜனாதிபதி!

கண்டி, ஏப். 26

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மல்வத்து, அஸ்கிரி மகா நாயக்க தேரர்களை நேற்றைய தினம் சந்தித்து ஆசி பெற்றார்.

மல்வத்து மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, மல்வத்து மகாநாயக்க தேரர் திப்பட்டு வாவே சுமங்கல நாயக்க தேரரை சந்தித்து, "தலதா வழிபாடு" மற்றும் அது தொடர்பாக எழுந்துள்ள பிரச் னைகள் குறித்து கலந்துரையா டினார்.

பின்னர், அஸ்கிரி மகா விகாரைக்குச் சென்ற ஜனாதி பதி அநுரகுமார திஸநாயக்க, அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரதன தேரரை சந்தித்து உரையாடி னார்.



இதன்போது, கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே நிலங்க தேல, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோரும் உடனிருந்தனர்.

(ஐ)

# தெவிநுவர இரட்டை கொலை மேலுமொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 26

தெவிநுவர விஷ்ணு ஆல யம் அருகே இரு நபர்கள் சுட் டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந் தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

மாத்தறை - கந்தர - தலல்ல பகுதியை சேர்ந்த 33 வயது நபரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதானவர், இரட்டைக் கொலை சம்பவத்தில் ஈடு பட்ட துப்பாக்கிதாரிக ளுக்கு உதவினார் என்ற குற்றச் சாட்டிலேயே கைது செய் யப்பட்டார்.

கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 27 மற்றும் 29 வயதான இருவர் உயிரிழந் தனர்.

இந்தச் சம்பவம் தொடர் பில் இதுவரை துப்பாக்கிதாரி உள்ளிட்ட 13 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலால் நாட்டை வங்குரோத்துக்கு தள்ளியோர் ஊழலற்ற நிர்வாகம் குறித்து பாடம் எடுக்கின்றனர்

## அமைச்சர் சுனில் ஹெந்துனெத்தி



கொழும்பு, ஏப். 26

**ஊழல் மோசடியால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்ஷர்கள் இன்று ஊழலற்ற வகையில் நாட்டை எவ்வாறு நிர்வகிப்பது என்று எமக்கு கூறுகின்றனர். ஊழல் மோசடியான அரச நிர்வாகத்தை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். மீண்டும் அவ்வாறான முறையற்ற நிர்வாகத்தை மக்கள் தோற்றுவிக்க மாட்டார்கள் - இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.**

மாத்தறை - தங்காலையில் நடந்த தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர்கள் எளிமையாக இருப்பதையும் எதிர் கட்சியினர் இன்று விமர்சிக்கிறார்கள். கடந்த கால ஆட்சியாளர்கள், அரசாங்கங்கள் சுகபோகமாக செயல்பட்ட காரணத்தால்தான் இந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது - ஊழல் மோசடியால் பாதிக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஜனாதிபதி மாளிகையிலோ, அலரி மாளிகையிலோ வசிப்பதில்லை. ஏனெனில், இவற்றை பராமரிப்பதற்கு பல மில்லியன் ரூபாய் மாதாந்தம் செலவாகும். நாடு வங்குரோத்து நிலையடைந்து மக்கள் கடினமான நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சுகபோகமாக வாழவில்லை.

ஊழல் மோசடியால் நாட்டை வங்குரோத்துக்கு தள்ளிய ராஜபக்ஷர்கள் இன்று ஊழலற்ற வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுப்பது குறித்து எமக்கு குறிப்பிடுகிறார்கள்.

நாமல் ராஜபக்ஷ ஊழலற்ற வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்குகிறார். இது நகைப்புக்குரியது. இவர்கள் கடந்த காலங்களில் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

சுகபோகம் மற்றும் ஊழல் மிகுந்த அரசியல் கட்டமைப்பை மக்கள் முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

ஆகவே, முறை யற்ற அந்த நிர்வாக கட்டமைப்பை மீண்டும் தோற்றுவிக்கமாட் டார்கள். அரச செலவுகளை குறைத்துக் கொண்டு நாட்டை நிர்வகிக்கிறோம் - என்றார். (ஐ)

# மகியங்கனையில் பேருந்து விபத்து மாணவர்கள் உட்பட 28 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 26

தொழில்நுட்ப கோளாறால் பேருந்து விபத்துக்குள்ளானதில் 10 மாணவர்கள் உட்பட 28 பேர் காயமடைந்துள்ளனர் என்று மகியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை - மகியங்கனை - திஸ்ஸபுர பிரதேசத்தில் நேற்று காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பேருந்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 10 பாடசாலை மாணவர்கள் உட்பட 28 பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மகியங்கனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மகியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 342 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 26

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 342 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயினுடன் 101 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 135 பேரும், கஞ்சாவுடன் 106 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் 135 கிராம் 263 மில்லிகிராம் ஹெரோயின், 216 கிராம் 782 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 115 கிலோ 344 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஓடிக்கொண்டிருந்த கார் தீப்பற்றி எரிந்து நாசம்!



கொழும்பு, ஏப். 26

பயணித்துக் கொண்டிருந்த கார் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை, லக்கலை, ஹெட்டிப்பொல பிரதேசத்திலேயே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தின்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. காரில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் இந்தத் தீ விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்தில் கார் முற்றாக எரிந்து நாசமானதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மேர்வின்மீதான வழக்கு ஜூன் 30

கொழும்பு, ஏப். 26

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து ஒழுங்கீனமாக நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வுக்கு எதிரான வழக்கை எதிர் வரும் ஜூன் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரான மேர்வின் சில்வா நீதிமன்றத்தில் முற்ப டவில்லை. சந்தேக நபர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப் பட்டதை அடுத்து, குறித்த வழக்கை ஜூன் 30 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

அத்தோடு, அன்றைய தினம் சந்தேக நபர் சிறையிலிருந்தாலும், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (ஐ)

# வாஷிங்டனின் உயரதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேசவில்லை!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஏப். 26

வாஷிங்டன் சென்ற இலங்கை பிரதிநிதிகள் அமெரிக்க அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகள் எவரையும் சந்தித்து பேசவில்லை.

கீழ் மட்ட அதிகாரிகளுடன் பேச்சுகளை முன்னெடுப்பதால் இந்த பிரச்னைக்கு ஒருபோதும் தீர்வு காண முடி யாது என்று ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். கொழும் பில் நேற்று முன் தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வாஷிங்டன் சென்ற இலங்கை பிரதிநிதிகள் அமெரிக்க அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகள் எவ ரையும் சந்தித்து பேசவில்லை. கீழ்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுகளை முன்னெடுப்பதால் இந்த பிரச்னைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

நாட்டில் பல்வேறு தொழில் துறை களில் அமெ ரிக்காவின் வரி அதிகரிப்பு நேரடியாக தாக்கம் செலுத்தி யுள்ளது. இந்த பிரச்னை ஒரு புறமிருக்க மறு புறம் தேசிய பாது காப்பும் கேள்விக்கு உள்ளாக் கப்பட்டிருக்கிறது. நாளாந்தம் நாட்டின் பல பகுதிகளிலும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்ப டுகின்றன.

அரசாங்கம் தேசிய பாது காப்பை உறுதிப்படுத்த தவறி விட்டது. குற்றப்புலனாய்வு பிரிவினர் முற்றுமுழுதாக அரசியல் பழிவாங்கல்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றனர்.

இந்த அரசாங்கத்தின் எந்தவோர் அமைச்சும் நாட்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங் களை முன்னெடுக்கவில்லை. குற்றப் புலனாய்வு திணைக்களம் மாத்திரமே செயல்படுகிறது. அதுவும் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டு அரசாங்கத்தின் வேலைகளை மாத்திரமே முன்னெடுக்கிறது- என்றார். (ஐ)

# சிக்குன்குனியா நோய் தாக்கம் மேல் மாகாணத்தில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 26

மேல் மாகாணத்தில் சிக்குன்குனியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் 16 ஆயிரத்து 544 நோயாளர்கள் பதிவான நிலையில் மேல் மாகாணத்தில் மட்டும் 7 ஆயிரத்து 611 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன்படி,

கொழும்பு மாவட்டத்தில் அதிகளவாக 2 ஆயிரத்து 709 பேரும் கம்பஹாவில் 2 ஆயிரத்து 453 பேரும் களுத்துறையில் 2 ஆயிரத்து 567 பேரும் பதிவாகியுள்ளனர்.

இதேசமயம், சிக்குன்குனியா நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் மேல் மாகாண ஆளுநர் கருத்து வெளியிடுகையில்,

நும்புகளால் பரவும் சிக்குன்குனியா நோயை தடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனது உத்தரவின் கீழ் கொழும்பு பிராந்திய சுகாதார பணிமனையுடன் ஒருங்கிணைந்து ட்ரோன்களைப் பயன்படுத்தி புகை விசிறுதல் போன்ற அனைத்து தடுப்பு நடவடிக்கை களும் நடந்து வருகின்றன.

அத்துடன்,

இந்த மாதத்தில் 18 சிக்குன்குனியா நோய் தடுப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன", என்றார். (ஐ)

*மீதெனிய முக்கொலை:*

# இந்தியாவில் கைதானவர் நேற்று நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு, ஏப். 26

மீதெனிய முக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இந்தியாவில் கைதான சந்தேகநபர் நேற்று நாடு கடத்தப்பட்டார். நாடு கடத்தப்பட்ட சந்தேகநபரை கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸார் கைது செய்தனர்.

மாத்தறை மீதெனிய பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கஜ்ஜான என அழைக்கப்படும் அருண விதானகமகே மற்றும் அவரின் இரு பிள்ளைகள் உயிரிழந்தனர். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குறித்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்தினார் என்று கூறப்படும் சந்தேக நபரே இவ்வாறு இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட நிலையில் நாடு கடத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 134 தேர்தல் விதிமீறல் சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு!

மட்டக்களப்பு, ஏப். 26

**மட்டக்களப்பு மாவட்டத்தில் 134 தேர்தல் விதி மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இதுவரை எந்தவித வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தெரிவித்துள்ளார்.**

அத்தோடு, வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்களுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை இதற்காக விசேட தினமாக ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# "அனைத்துப் பிள்ளைகளும் சிறந்து விளங்க வேண்டும்"




பொத்துவில், ஏப். 26

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேசத்தில் தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று கற்றல் மற்றும் விளையாட்டுத் துறை செயல்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.

பொத்துவில் மத்திய விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தந்தையை இழந்து வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பிள்ளைகளுக்கு படிக்க வேண்டும் என்ற எண்ணம், ஆசை இருந்தாலும் அவர்களின் குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு பெரும்பாலும் வேலைக்கு செல்கின்றனர். அந்தப் பிள்ளைகள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

மேலும், பாடசாலை செல்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கான கல்வி பெறும் உரிமை கட்டாயம் வழங்கப்பட வேண்டியுள்ளது. அவர்களின் வளர்ச்சி, விருத்திக்கு அவசியமான சுகாதார நலனோம்பல் விடயங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்- என்றார்.

இதன்போது, தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 50 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ)

# கல்முனை மாநகர சபையில் தபால் மூல வாக்களிப்பு



கல்முனை, ஏப்.26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

இதன்போது, கல்முனை மாநகர சபை எல்லைக்கு அப்பாற்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களை வசிப்பிடமாக கொண்ட உத்தியோகத்தர்கள் பலர் தமது வாக்குகளை பதிவு செய்தனர்.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளரான ஏ.எஸ்.எம். அஸீம் வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக கடமையாற்றினார்.

இதன்போது, உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்களும் சமுகமளித்திருந்தனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியான நகர சபையை ஸ்தாபிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக கல்முனை மாநகர சபைக்கு மாத்திரம் தேர்தல் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஓட்டோ - கப் ரக வாகனம் மூதூரில் மோதி விபத்து

**குடும்பஸ்தர் உயிரிழப்பு**

மூதூர், ஏப். 26

திருகோணமலை மாவட்டம் மூதூர் பொலிஸ் பிரிவிவுள்ள பெரியபாலம் பகுதியில் ஓட்டோவும் சிறிய ரக கப் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோ சாரதி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மூதூர் -ஆனைச்சேனையைச் சேர்ந்த நஸீர் (வயது- 62) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

முன்னால் சென்று கொண்டிருந்த ஓட்டோ மீது, கப் ரக வாகனம் இடித்து மோதியதில் விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# "தமிழினத்துக்கான தேர்தலாக இத்தேர்தலை கருதவேண்டும்!"

மட்டக்களப்பு, ஏப். 26

வட்டாரத் தேர்தலையும் தாண்டி, தமிழினத்துக்கான தேர்தலாக இத்தேர்தலை கருத வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மூன்று பாராளுமன்ற பிரதிநிதிகள் கிடைக்கப்பெறுவதற்கான ஆணையை எமது மாவட்ட மக்கள் வழங்கினார்கள். இதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான வழி வகைகளை எமது கட்சியும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோன்று, எமது மட்டு. மாநகர சபைக்குட்பட்ட மக்களின் தேவைகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து சபையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றெண்ணி, உங்களது சீலாமுனை வட்டாரத்தில் இளம் துடிப்புள்ள ஒருவரான சுதர்சனை எமது கட்சி களமிறங்கியுள்ளது. அவரை வெற்றிபெறச் செய்து உங்களின் பிரதேச தேவைகளை நிவர்த்தி செய்யகொள்ள முடியும்- என்றார்.

சீலாமுனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கல்முனைக்கு பயணம்

கல்முனை, ஏப். 26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜெஹான் குணதிலக தலைமையிலான உயர் மட்டக்குழுவினர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய நிலையத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

இதன்போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் நெறிப்படுத்தலில் விசேட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.இதில், ஆணைக்குழுவின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் க. கபிலன் வில்லவராஜன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் எம். அஹமட் ஆகியோர் பங்கேற்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு, ஆணைக்குழுவிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இக்குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்புப் பிரச்சனைகள், சட்ட ரீதியாகவுள்ள உரிமைகள் பற்றியும் இவற்றைப் பிரயோகிக்கின்ற போது ஏற்





படுகின்ற சவால்கள் பற்றியும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிராந்திய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ் மொழிப் பிரயோகத்தின் அவசியம் பற்றியும் பாதிக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு வருகின்ற பொதுமக்களுக்கான விரைவான பரிகாரங்கள் மற்றும் வழக்கு நடைமுறைகளிலுள்ள சவால்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. (ஏ-01)

# மூதூரில் அதிகாலையில் விசேட சுற்றிவளைப்பு!

**பொலிஸாரால் மூவர் கைது**



மூதூர், ஏப். 26

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் பேரில், போதை ஒழிப்புப் பிரிவினரால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஆலிம்சேனை பகுதியில் ஒருவர் 3. 2 கிராம் ஐஸ் போதைப்பொருளுடனும், பாலத்தோப்பூர் பகுதியில் ஒருவர் 2. 6 கிராம் ஐஸ் போதைப் பொருளுடனும் மற்றும் தோப்பூர் பகுதியில் ஒருவர் 2. 8 கிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், விற்பனைக்காக போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டதாகவும், இவர்கள் தற்போது மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து நதிநீர் நிறுத்தம்

# இந்தியாவின் அறிவிப்பு போர் நடவடிக்கைதான்!

## பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் தெரிவிப்பு



இஸ்லாமாபாத், ஏப்.26

**சிந்து நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்க இந்தியா எடுத்துள்ள முடிவு, போர் நடவடிக்கையாக கருதப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் அருகேயுள்ள பைசரன் பள்ளத்தாக்கில், தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் தீவிரவாதிகள் கடந்த 22ஆம் திகதி சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த பயங்கரவாத தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இந்த பின்னணியில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவை கூட்டத்தில், எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 1960ஆம் ஆண்டு செய்து கொண்ட சிந்து நதிநீர் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படும் என்பது உட்பட 5 முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான தேசிய பாதுகாப்புக் குழு கூட்டம் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது. இதில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை அந்த நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. அவை வருமாறு:

சிந்து நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதற்கான இந்தியாவின் அறிவிப்பை பாகிஸ்தான் கடுமையாக எதிர்க்கிறது. இந்த ஒப்பந்தம் உலக வங்கியால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். மேலும், ஒருதலைப்பட்சமாக நிறுத்தி வைப்பதற்கான எந்த ஏற்பாடும் இதில் இல்லை. சிந்து நதிநீர் பாகிஸ்தானின் தேசிய நலனுக்கு மிகவும் முக்கியமானது, பாகிஸ்தானின் 24 கோடி மக்களுக்கு அது உயிர்நாடி.

சிந்து நதிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்த எத்தகைய விலையையும் பாகிஸ்தான் கொடுக்கும். சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானுக்குச் சொந்தமான நீரின் ஓட்டத்தைத் தடுப்பது அல்லது திசைதிருப்புவது, ஆற்றின் கீழ் பகுதியின் உரிமைகளை அபகரிப்பதாகும். இது ஒரு போர்ச் செயலாகக் கருதப்படும். சிந்து நதிநீர் நிறுத்தப்பட்டால் பாகிஸ்தான் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி பதிலளிக்கும்.

**இந்தியா மீதான பதில் நடவடிக்கைகள்:**

சர்வதேச மரபுகள், ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானங்கள் ஆகியவற்றை மதிக்காத பொறுப்பற்ற ஒரு நாடு இந்தியா. அது பாகிஸ்தானுக்குள் பயங்கரவாதத்தைத் தூண்டுகிறது, படுகொலைகளை நிகழ்த்துகிறது, காஷ்மீர் மீதான சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை பின்பற்ற மறுக்கிறது. இத்தகைய வெளிப்படையான நடத்தையை இந்தியா கைவிடும் வரை, சிம்லா ஒப்பந்தம் உட்பட அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைக்கும் உரிமையை பாகிஸ்தான் பயன்படுத்தும்.

வாகா எல்லையை பாகிஸ்தான் உடனடியாக மூடும். இந்தப் பாதை வழியாக இந்தியாவிலிருந்து அனைத்து எல்லை தாண்டிய போக்குவரத்தும் விதிவிலக்கு இல்லாமல் நிறுத்தப்படும். அரசின் ஒப்புதலுடன் கடந்து சென்றவர்கள் ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் அந்த வழியாக திரும்பலாம். அதன்பிறகு அனுமதிக்கப்பட மாட்டார்கள். சார்க் விசா விலக்கு திட்டத்தின் கீழ் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து விசாக்களும் இரத்து செய்யப்படுகிறது. சீக்கிய மத யாத்திரிகர்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு, கடற்படை மற்றும் விமானப் படைகளின் ஆலோசகர்களுக்கான அங்கீகாரம் இரத்து செய்யப்படுகிறது. அவர்கள் ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் பாகிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும். இந்த ஆலோசகர்களுக்கு உதவும் பணியில் உள்ள ஊழியர்களும் இந்தியாவுக்குத் திரும்ப அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முதல் இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரக ஊழியர்களின் எண்ணிக்கை 30 ஆக குறைக்கப்படும். இந்தியாவுக்குச் சொந்தமான அல்லது இந்தியாவால் இயக்கப்படும் அனைத்து விமான நிறுவனங்களுக்கும் பாகிஸ்தானின் வான்வெளி உடனடியாக மூடப்படும். இந்தியாவுடனான அனைத்து வர்த்தகமும் நிறுத்தப்படுகிறது என்று பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் பதற்றம் அதிகரிப்பு

# "காஷ்மீருக்கு செல்ல வேண்டாம்" அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்தல்

வாஷிங்டன், ஏப். 26

அமெரிக்கர்கள் யாரும் ஜம்மு-காஷ்மீருக்கு செல்ல வேண்டாம் என்றும் இந்தியா - பாகிஸ்தான் எல்லையிலிருந்து 10 கிலோ மீற்றருக்குள் செல்வதைத் தவிர்க்குமாறும் அமெரிக்கா பயண ஆலோசனையை வெளியிட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் அருகேயுள்ள பைசரன் பள்ளத்தாக்கில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை அடுத்து ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளை தேடும் பணியில் இந்திய இராணுவம் தீவிரம் காட்டி வருகிறது.

இந்த பின்னணியில், அமெரிக்கர்கள் யாரும் ஜம்மு காஷ்மீருக்கோ, இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்கோ செல்ல வேண்டாம் என்று அந்த நாட்டு அரசு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் அமெரிக்க வெளிவிவகாரத் துறை வெளியிட்டுள்ள புதிய பயண எச்சரிக்கையில், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் உள்நாட்டு வன்முறைக்கு வாய்ப்புள்ளது. எனவே, இந்த மாநிலத்துக்கு பயணம் செய்ய வேண்டாம்.

இந்தப் பகுதியில் அவ்வப்போது வன்முறை நிகழ்கிறது, மேலும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் இத்தகைய வன்முறை பொதுவானது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உடன் நிறுத்துங்கள் புடின் வாரம் 5000 படையினர் பலி




வாஷிங்டன், ஏப். 26

உக்ரைனின் கீவ் நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதல் தேவையற்றது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இதே வேளை, வாரம் 5 ஆயிரம் படையினர் பலியாகின்றனர். எனவே, போரை உடன்நிறுத்துங்கள்புடின் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரால் இருதரப்பிலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். மேலும், உக்ரைனிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில், தொடர்ந்து போர் நீடித்து வருகிறது. ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை தற்காலிக போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்தார்.

ஆனால், அன்றைய தினத்திலும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டினார். இந்த நிலையில், உக்ரைனின் தலைநகர் கீவ் அருகே நேற்று அதிகாலை ரஷ்ய இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 63 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் கீவ் நகரின் மீது நிகழ்த்தப்பட்ட மோசமான தாக்குதல்களில் ஒன்று என இந்தத் தாக்குதல் குறித்து உக்ரைன் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கீவ் நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதல் தேவையற்றது, மோசமான தருணத்தில் நடத்தப்பட்டுள்ளது. நிறுத்துங்கள் புடின்! வாரம் 5 ஆயிரம் படையினர் பலியாகின்றனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துங்கள்" என்று பதிவிட்டுள்ளார். (எ)

# ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய ஜனாதிபதிகள் பட்டியலில் மூன்

சியோல், ஏப். 26

தென்கொரியாவில் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய ஜனாதிபதிகளின் பட்டியலில் மூன் ஜே இன்னும் இணைந்துள்ளார்.

தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி மூன் ஜே இன். இவர் கடந்த 2017 முதல் 2022ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவி வகித்தார். அவர் சட்டவிரோதமாக தனது மருமகனை விமான போக்குவரத்துத் துறை இயக்குநராக நியமித்துள்ளார். எனவே, அவர் பெற்ற சம்பளம், சலுகைகள் மூலம் தாய்லாந்தின் தாய் ஈஸ்டர் ஜெட் விமான நிறுவனத்திடமிருந்து இலங்கை மதிப்பில் சுமார் 5. 29 கோடி ரூபாய் மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனையடுத்து ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய ஜனாதிபதிகள் பட்டியலில் மூன் ஜே இன்னும் இணைந்துள்ளார். முன்னதாக தென்கொரியாவின் முதல் பெண் ஜனாதிபதியான பார்க் கியூன்-ஹை, தாராளவாத கட்சியைச் சேர்ந்த ரோ மூ-ஹியூன் உள்ளிட்ட ஜனாதிபதிகள் தங்களது பதவிக்காலம் முடிந்த பிறகு ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

# தயார் நிலையில் இருக்க இராணுவத்துக்கு உத்தரவு

## பாகிஸ்தான் அரசு பிறப்பித்தது

கராச்சி, ஏப். 26

பாகிஸ்தான் இராணுவத்தை தயார் நிலையில் இருக்க அந்த நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தலத்தில் பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில், 28 பேர் கொல்லப்பட்டனர். இந்தப் பயங்கரவாத சம்பவம் இந்தியாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த சம்பவத்துக்கு காரணமான பயங்கரவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும், முப்படைகளையும் தயார் நிலையில் இருக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தான் இராணுவத்தையும் தயார் நிலையில் இருக்க அந்த நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தியா பதிலடி கொடுத்தால் அதை எதிர்கொள்ளும் வகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வாகா எல்லையை மூடுவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தான் அணியை வீழ்த்தி பெங்களூரு அசத்தல் வெற்றி

பெங்களூரு, ஏப். 26

11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி பெங்களூரு அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 42ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில், பெங்களூரு அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பில் விராட் கோலி மற்றும் பிலிப் சால்ட் ஆகியோர் களமிறங்கினர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த இந்த ஜோடியில், சால்ட் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக விராட் கோலியுடன், தேவ்தத் படிக்கல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியில் அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்த விராட் கோலி தனது அரைச்சதத்தை பதிவு செய்து அசத்தினார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய அவர் 70 ஓட்டங்களில் வெளியேறினார். மறுமுனையில் அதிரடி காட்டி வந்த படிக்கல், 26 பந்துகளில் தனது அரைச்சதத்தை பதிவு செய்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து படிதார் ஓர் ஓட்டத்தில் வெளியேறினார். ஜிதேஷ் சர்மா 20 ஓட்டங்களும் ரிம் டேவிட் 23 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்கள் எடுத்தது. ராஜஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக சந்தீப் சர்மா 2 விக்கெட்களும், ஜோப்ரா ஆர்ச்சர் மற்றும் ஹசரங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது .




தொடக்கத்தில் சூர்யவன்ஷி 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் ஜெய்ஸ்வால் அதிரடியாக விளையாடினார். பந்துகளை பௌண்ட்ரி, சிக்ஸருக்கு அவர் பறக்க விட்டார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய அவர் 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் நிதிஸ் ராணா 28 ஓட்டங்களும் ரியான் பராக் 22 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மறுபுறம் அதிரடி காட்டி வெற்றிக்காக போராடிய துருவ் ஜூரேல் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 194 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், பெங்களூரு அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெங்களூரு அணியில் ஹேசில்வுட் 4 விக்கெட்களை வீழ்த்தினார். (எ)

# விராட் கோலி சாதனை


பெங்களூரு, ஏப். 26


ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்ற 42ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில் விராட் கோலி 70 ஓட்டங்கள் அடித்தார்.

இதனையும் சேர்த்து ரி - 20 போட்டிகளில் முதல் இன்னிங்ஸில் விராட் கோலி 50 ஓட்டங்களுக்கு மேல் அடிப்பது 62ஆவது முறையாகும். இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் முதல் இன்னிங்ஸில் அதிக முறை 50 ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர் என்ற உலக சாதனையை விராட் கோலி படைத்துள்ளார். இதற்கு முன் பாபர் அஸாம் 61 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை தகர்த்துள்ள விராட் கோலி புதிய சாதனை படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. விராட் கோலி - 62 முறை,
2. பாபர் அஸாம் - 61 முறை,
3. கிறிஸ் கெயில் - 57 முறை,
4. டேவிட் வோர்னர் - 55 முறை,
5. ஜோஸ் பட்லர், பாப் டு பிளஸ்சிஸ் - 52 முறை. (எ)



# மட்ரிட் ஓபின் ரெனிஸ்: அல்காரஸ் திடீர் விலகல்

மட்ரிட், ஏப். 26

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்றில் ஸ்பெயினின் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ், கனடாவின் கேப்ரியல் டியாலோவுடன் மோதவிருந்தார்.

இருப்பினும், காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடைசி நேரத்தில் தொடரிலிருந்து விலகினார். இதனால், கேப்ரியல் டியாலோ விளையாடாமலே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். (எ)

# மட்ரிட் ஓபின் ரெனிஸின் 3ஆவது சுற்றில் மேடிசன் கீஸ்

மட்ரிட், ஏப். 26

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் மேடிசன் கீஸ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸ், இத்தாலியின் லூசியா ப்ரோனெட்டியுடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மேடிசன் கீஸ் 6-4 மற்றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



# பஹல்காம் தாக்குதல் எதிரொலி: "பாகிஸ்தானுடன் இனி விளையாட மாட்டோம்"

மும்பை, ஏப். 26

பாகிஸ்தான் அணியுடன் இனிமேல் விளையாட மாட்டோம் என்று இந்தியாவின் கிரிக்கெட் சபையான பி. சி. சி. ஐ. அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 28 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு விளையாட்டு பிரபலங்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதன் எதிரொலியாக இனி வரும் காலங்களில் பாகிஸ்தானுடன் இரு தரப்பு தொடர்களில் விளையாட மாட்டோம் என்று பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், "இனி வரும் காலங்களில் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் கண்டிப்பாக விளையாட மாட்டோம். பாதிக்கப்பட்டவர்களுடன் நாங்கள் இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் என்ன சொன்னாலும், நாங்கள் செய்வோம். அரசாங்கத்தின் நிலைப்பாடு காரணமாக இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாடுவதில்லை. இனி வரும் காலங்களிலும் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம். ஆனால், ஐ.சி.சி. போட்டிகளை பொறுத்தவரை, ஐ.சி.சி. வற்புறுத்தலின் காரணமாக நாங்கள் விளையாடுகிறோம்" - என்று கூறினார்.

அத்துடன் ஐ.சி.சி. தொடர்களில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என ஐ.சி.சிக்கு பி.சி.சி.ஐ. கடிதம் எழுதியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லை பிரச்னை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இரு தரப்பு தொடர்களில் இரு நாட்டு கிரிக்கெட் அணிகளும் விளையாடவில்லை. ஐ.சி.சி. தொடர்களில் மட்டுமே விளையாடி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# முதல் பந்தில் சிக்ஸர் ஜெய்ஸ்வால் சாதனை

பெங்களூரு, ஏப். 26

ஐ. பி. எல். போட்டித் தொடரில் முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்து ஜெய்ஸ்வால் புதிய சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்ற 42ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில் ராஜஸ்தான் தரப்பில் ஜெய்ஸ்வால் 49 ஓட்டங்கள் அடித்தார். அத்தோடு, ராஜஸ்தான் அணி இலக்கை நோக்கி களமிறங்கிய முதல் பந்திலேயே தொடக்க வீரரான ஜெய்ஸ்வால் சிக்ஸர் அடித்து அதிரடியாக தொடங்கினார். இப்படி முதல் பந்திலேயே அவர் சிக்ஸர் அடிப்பது இது 3ஆவது முறையாகும். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்த வீரர் என்ற மாபெரும் சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

பட்டுள்ளது.

அதன்படி, ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவொன்று எதிர் வரும் 28 ஆம் திகதி முதல் மே மாதம் 7 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஏக்கிய...

அதனை எமது 8 பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்றத்தில் எதிர்வாதம் செய்து எதிர்த்து வாக்களிப் பார்கள் என்று, ஏற்கனவே நான் கூறி இருக்கிறேன். அதனை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இந்தக் கருத்தை தெரிவிக்கும் பொறுப்பும் உரிமையும், எனக்கு உண்டு என்பதையும் திடமாக வலியுறுத்துகிறேன்.

ஒருவேளை, நான் ஒரு மேட்டுக்குடி சாராதவன் என்பதால், யாரவது மேட்டுக்குடி சார்ந்தவர்தான் சொல்ல வேண்டும் என நினைக்கிறார்களோ தெரியவில்லை.

அவர்களுக்கு எல்லாம் நான் கூறிக் கொள்வது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, சாமானிய மக்களுக்கானது. அவர்களில் ஒருவன் நான்.

ஆயினும் எந்த மேட்டுக்குடியி னர்க்கும் குறைந்தவனும் அல்ல.

நீங்கள் எதிர்பார்ப்பது போல, இனி மேல் எந்த மேட்டுக்குடி மேலாதிக்க காரரும், தமிழ் அரசுக் கட்சிக்குள் இறக்குமதி செய்யப்பட மாட்டார்கள் என்பதையும், ஆணித்தரமாக பதிவு செய்கிறேன் - என்றார். (அ)

## மீனவ...

சென்ற கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அப்பகுதி கடற்தொழில் சங்கத் தலைவரை அழைத்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, கடற்தொழில் சங்கத் தலைவர், கடற்கரைக்கு செல்லும் வீதியைப் புனரமைத்து தருமாறு நீண்ட காலமாக பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களிடமும் கோரிக்கை முன் வைத்து யாரும் அதனைப் புனரமைத்துத் தரவில்லை. வருபவர்கள் எல்லாம் தேர்தல் பிரசாரங்களுக்காக எம்மை நாடி வந்த பின்னர், தேர்தல் முடிய எமது பிரதேசத்துக்கு வருவதில்லை. எந்த அரசியல்வாதிகளையும் நாம் நம்ப மாட்டோம் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன்போது, அமைச்சருடன் இருந்த அவரது சாரதி ஒரு அமைச்சருடன் இவ்வாறாக கதைப்பது என கூறி மீனவர் சங்கத் தலைவரைக் கடுமையாக தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, அசண்டையீனமாக சைகையை காட்டி, நிகழ்வு தொடர்பில் ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேளுங்கள் என பதிலளித்தார். (அ)

## காணாமல்...

உறவுகள் தெரிவிக்கயில்-

2 ஆயிரத்து 984 ஆவது நாளாகவும் எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது உறவுகளைத் தேடி அலைந்து திரிகின்றோம். இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த அரசும் எமக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தரவில்லை. சர்வதேசத்திடம் ஒரு முகமும் எம்மிடம் ஒரு முகமுமாக அரசு செயற்பட்டு வருகின்றது.

தற்போதைய அரசு கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எமது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை-என்றனர். (அ)

## கீரிமலை...

மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கட்டடத்தை சமூக மற்றும் அபிவிருத்தி நோக்கில் மக்களுக்கு பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவது குறித்து பல்வேறு யோசனைகள் முன் வைக்கப்பட்டு, விரைவில் திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. (அ-05)

## மோடியுடன்...

பதினைந்து நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடினர்.

இந்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்து தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகக் கூறிய ஜனாதிபதி, இந்திய மக்களுடன் இலங்கை எப்போதும் சகோதரத்துவத்துடன் பிணைந்துள்ளது - என்றார்.

அத்துடன் உலகில் எங்கு இடம்பெற்றாலும், பயங்கரவாதத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுர குமார வலியுறுத்தினார்.

இந்த கொடூரமான பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் இரங்கலைத் தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தித்தார்.

மேலும், எழுந்துள்ள நிலைமையால் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலை விரைவில் தீர்க்கப்பட்டு பிராந்திய அமைதி நிலைநாட்டப்படும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## மீனவர்...

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரத்துக்காக முல்லைத்தீவு - கேப்பாபிலவுக்குச் சென்றுள்ளார். இதன்போது அங்குள்ள மீனவர் சங்கத் தலைவரை அழைத்து அவரது வீட்டுக்கு வெளியே வைத்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது அந்த மீனவர் சங்கத் தலைவர், தாங்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்னைகளை கூறியதுடன், இந்த பிரச்னை குறித்து கடந்த காலங்களில் பதவியில் இருந்த அமைச்சர்களிடம் தெரிவித்த நிலையில் அவர்கள் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இதன்போது அமைச்சர் சந்திரசேகர் கருத்து தெரிவிக்க முயன்றபோது, குறித்த மீனவர் சங்கத் தலைவரான சுகிந்தன், நீங்கள் வாருங்கள் நந்திக் கடலுக்குச் சென்று நிலைமைகளை நேரில் காண்பிக்கிறேன் எனத் தெரிவித்து அவர்களை வழிநடத்தி முன்னே செல்ல முற்பட்டார். அந்த வீதி மிகவும் மோசமாக காணப்பட்டது. தாங்கள் தினமும் இந்த வீதியில் தான் பயணிக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு தான் அவர் இவ்வாறு முயன்றுள்ளார்.

இதன்போது அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் கையாட்கள் அந்த மீனவர் சங்கத் தலைவரை தாக்கியுள்ளனர். இதனால் அந்த மீனவர் சங்கத் தலைவர் பயப் பீதியிலேயே உள்ளார். இந்த விடயத்தை நாங்கள் அவரிடம் கேட்டு தெரிந்துகொண்டோம். அவர் பொலிஸிடம் முறைப்பாடு செய்வதற்குக் கூட பயத்தில் உள்ளார்.

இன்றைக்கு சரி பிழைகளுக்கு அப்பால் எத்தனையோ பேர் திட்ட மிட்ட வகையில் கொல்லப்படுகின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இப்படியான விடயங்களை எந்த அளவுக்கு நீங்கள் வெளியே கொண்டு வருகின்றீர்களோ அந்த அளவுக்கு அது அரசு தரப்புக்கு அழுத்தமாக மாறும் - என்றார். (அ-05)

# சர்வதேச நாணய நிதியத்தின் நான்காம் மதிப்பாய்வு நிறைவு

### ஒப்புதலுக்காகக் காத்திருப்பு

கொழும்பு, ஏப். 26

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவுக்கும் இலங்கையின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பொருளாதார கொள்கைகள் தொடர்பில் பணியாளர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டின் கீழ், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஊடாக இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு இந்த மதிப்பாய்வுக்கு ஒப்புதல் வழங்கியதன் பின்னர் இலங்கைக்கு 344 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி பெற வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தேசபந்துவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் பாய்கிறது!



கொழும்பு, ஏப். 26

மாத்தறை வெலிகம ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூடு தொடர்பான வழக்கில், கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி பிணை பெற்று சென்றபோது நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை மீறியதன் மூலம் தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் நேற்று குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்புக்காக முதல் கட்டத்திலேயே வழக்குத் தொடர மாத்தறை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லாததால், தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யமாறு சட்டமா அதிபருக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## உள்ளூரிலும்...

தமக்கே மக்கள் ஆணை வழங்கி உள்ளதாகவும் ஜே.வி.பியினர் கூறுகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

இதனை உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் கூட தெரிவித்து வருகின்றனர். எனவே இந்த பொய்ப் பிரசாரத்தையும் ஜே.வி.பியின் ஏமாற்றுத்தனங்களையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ்த் தேசிய நிலைப்பாடோடு அவர்கள் இப்போது இல்லை எனவும் கூறி வருகின்றனர். அவர்களுக்கு சமஷ்டியோ சுயாட்சியோ அவசியமில்லை என்றும் அவர்களை சமத்துவமாக கருதினால் இலங்கையர் என்ற அடையாளத்துடன் அவர்கள் வாழ்வார்கள் என்றவாறாக பேசி வருகின்றனர்.

அதேபோன்ற கடந்த காலங்களில் ஆட்சி செய்த கட்சிகள் ஊழல் நிறைந்த இனவாதத்துடன் செயற்பட்டதாலே தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க முடியவில்லை. ஆனால் நாம் ஊழல், இனவாதம் இல்லாத ஒரு கட்சியாகவே செயற்பட்டு வருவதால் எமக்கு தமிழ் மக்களும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இப்படி இன மத பாகுபாடு பார்க்காதவர்கள் என்றால் தமிழ் மக்களின் பிரச்னைகள், தேவைகள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை இன்னமும் ஏன் நிறைவேற்றவில்லை. தாம் வழங்கிய வாக்குறுதிகளை தாமே நிறைவேற்ற தெரியாதவர்கள்.

உண்மையில் இன மத வேறுபாடு பார்க்காதவர்கள் என்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் நிதியைக் கொடுப்பதில் என்ன பிரச்னை இருக்கிறது. அரசாங்கம் என்றவுடன் மக்களை அச்சுறுத்தி மிரட்டல் விடுவதா இவர்களது அரசியல் மாற்றம் எனக் கேட்கிறோம்.

நீங்கள் தான் பெரிய கட்சி என்றால் தையிட்டி விகாரை போன்ற இனவாதமில்லாத சின்ன சின்ன பிரச்னைகளுக்கு இனவாதம் இல்லாமல் தீர்வை வழங்கலாமே. ஆகவே உங்களிடம் இனவாதம் இல்லை என்றால் முதலில் தையிட்டி விவகாரம் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வைக் கொடுக்க நீங்கள் தயாரா எனச் சவால் விடுக்கிறோம்-என்றார். (அ)

# பாடசாலையில் மயங்கி விழுந்து மாணவி மரணம்

மட்டக்களப்பு, ஏப். 26

பாடசாலை வகுப்பறையில் மயங்கி விழுந்து மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை மதியம் மட்டக்களப்பு - கிரான்குளம் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

கிரான்குளம் 8 ஆம் பிரிவை சேர்ந்த க. பொ. த. சாதாரண தரத்தில் கல்வி கற்றுவரும் 16 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

மயங்கி விழுந்த மாணவி செட்டிப் பாளையம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக் குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இணையக்...

முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகக் கொழும்புக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, யாழ்ப்பாணத்தில் இணையக் குற்றவிசாரணைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (அ)

## இலஞ்ச...

ஒழிப்பு ஆணைக் குழுவிடம் ஆஜராவதாக உறுதிப்படுத்தினார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தொடர்பில் அவர் அளித்த சிறப்பு வாக்குமூலம் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்ய ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபையின் நிலையான வைப்பு நிதியை அரசு வங்கியில் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ், அவர் இராஜாங்க அமைச்சராக இருந்த முந்தைய பதவிக் காலம் தொடர்பான குற்றச்சாட்டுகளை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சுமத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

- நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த -

## மதுபானத்துக்கு பதில் மதுப்போத்தலில் தேநீர்!

கொழும்பு, ஏப். 26

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு பொருட்களை வைக்கும் அறையில் இருந்த வெளிநாட்டு மதுபான போத்தல்களில் மதுபானத்துக்கு பதிலாக தேநீர் ஊற்றி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளர் வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வழக்கு பொருட்களை வைக்கும் அறையில் இருந்த சில வெளிநாட்டு மதுபான போத்தல்களை அழிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

இதனால், வழக்கு பொருட்களை வைக்கும் அறையில் இருந்த 81 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் 150 பியர் போத்தல்கள் அழிப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தப் போத்தல்கள் சோதனையிடப்பட்டபோது மதுபானத்துக்கு பதிலாக அந்தப் போத்தல்களில் தேநீர் ஊற்றிவைக்கப்பட்டமை தெரிய வந்தது.

இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

தலதா வழிபாடு கண்காட்சி:

## பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸார் இருவர் மரணம்!

கண்டி, ஏப். 26

தலதா வழிபாட்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் உயிரிழந்தனர். இது தொடர்பில் பொலிஸ் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு உறுதிப்படுத்தியுள்ளது.

புனித தந்ததாது கண்காட்சியை பார்வையிட வரும் பொதுமக்களை பாதுகாக்கும் கடமையில் இருந்த போது திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இவர்கள் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் தங்கள் மரியாதைக்குரிய அஞ்சலியை செலுத்துவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மிருகத்தனமும் வன்முறையும் நாட்டில் இன்று பரவியுள்ளன!

### எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, ஏப். 26

**சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு கொடுத்து, வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதியளித்த வளமான நாடும், அழகான வாழ்வும் இன்று இல்லை. குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் கொலைகாரர்களின் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது. மிருகத்தனமும் வன்முறையும் பரவியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு - மாவத்தகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தேசிய பாதுகாப்பு குறித்து ரியூசன் வகுப்பு எடுக்கிறோம் வாருங்கள் எனக் கூறி பெருமையடித்த இந்த அரசு, இன்று பாதுகாப்பு குறித்து ரியூசன் வகுப்புக்கு செல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சமகாலத்தில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள், உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. வீடுகள், வீதிகள், பணியிடங்கள் பாதுகாப்பற்று காணப்படுகின்றன.



"இன்று பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை. வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கொள்கைப் பத்திரம் வாக்குறுதிகளை மீறும் நாடகமாக மாறியுள்ளது. பொருட்களின் விலைகள், எரிபொருள் விலைகள், மின்சாரக் கட்டணம், வற் மற்றும் பிற வரிகளை குறைப்பதாக வாக்குறுதி வழங்கினர். அந்த வாக்குறுதிகள் இன்னும் சரியாக நிறைவேற்றப்படவில்லை.

இந்த ஆளும் தரப்பினர் ஒலிவாங்கியை எடுத்துக்கொண்டு பொய்களை கூறி மக்களை ஏமாற்றி, அவஸ்தைப்படுத்தி வருகின்றனர்.

வரவு - செலவு திட்டத்தில் கூட இல்லாத விடயங்களை கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். பொய்களைக் கூறி நாட்டை ஏமாற்றும் இந்த கையாலாகாத அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## சிறுவனை ஆபாசமாக படம் எடுத்தவர் கைது!

கொழும்பு, ஏப். 26

13 வயது சிறுவன் ஒருவனை வைத்து ஆபாச காட்சிகளை படமாக்கிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க அரசின் காணாமல் போன மற்றும் சுரண் டலுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கான தேசிய மையம் மூலம் அனுப்பப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணிய கம் நடத்திய விசாரணைகளை தொடர்ந்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி, கடந்த 2ஆம் திகதி சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியக அதிகாரிகள் குழுவால் சந்தேகநபர் புத்தளம் ஆனமடுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் 34 வயதுடையவர். இவர் கைபேசி திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். இவர், கடந்த 2022ஆம் ஆண்டு முதல் இணையம் ஊடாக வெளிநாட்டு சிறுவர்களின் பாலியல் செயல்களை உள்ளடக்கிய ஆபாச காணொலிகள் மற்றும் படங்களை சேகரித்து பார்த்து வந்துள்ளார். அத்துடன், 13 வயது சிறுவன் ஒருவரின் நிர்வாண காணொலி மற்றும் படங்களை எடுத்து பதிவேற்றியுள்ளார் என்றும் விசாரணைகளில் மேலும் தெரிய வந்தது.

## டான் பிரியசாத் கொலை சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு, ஏப். 26

டான் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேகநபர் என்று குறிப்பிடப்படும் நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

சந்தேக நபரை மிரிஹான சிறப்பு புலனாய்வு பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவல முன்னிலையில் நேற்று முற்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

## குறிஞ்சாக்கேணி பாலத்தில் சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

கிண்ணியா, ஏப். 26

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தில், நேற்று முன்தினம் மாலை குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியை சேர்ந்த 10 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்தார். பொது மக்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு சிறுவனை சடலமாக மீட்டனர்.

மூன்று சிறுவர்கள் குளிக்கச் சென்ற நிலையில் இருவர் கரையேறிய நிலையில் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் கிண்ணியா தள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சிறீ தலதா வழிபாட்டில் பங்கேற்க புதியவர்களுக்கு அனுமதியில்லை!

### பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 26

சிறீ தலதா வழிபாட்டுக்காக எந்தவொரு காரணத்திற்காகவும் புதிய பக்தர்களை இணைத்துக் கொள்ள மாட்டோம் என்று பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

சிறீ தலதா வழிபாட்டுக்காக வந்த பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால், பக்தர்களை வரவேண்டாம் என்று நேற்று முன்தினம் முதல் அறிவிப்புகள் வெளியாகின.

இந்த நிலையில், தற்போது வரிசையில் உள்ள பக்தர்களுக்கு வழிபடுவதற்கான வாய்ப்பை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 4 இலட்சம் பக்தர்கள் வரிசையில் உள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், தற்போது வரிசையில் உள்ளவர்கள் சிறீ தலதா வழிபாட்டை நிறைவு செய்வதற்கு 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை வரையாகும் என்று கணிக்கப் பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டனர்.

இந்த சூழ்நிலையில், பக்தர்கள் சிறீ தலதா வழிபாட்டுக்காக கண்டிக்கு வரவேண்டும்.



ஒருவேளை வழிபட வாய்ப்பு கிடைத்தால் இன்று அல்லது நாளை அறிவிக கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## உள்ளூராட்சி தேர்தல் 2,623 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஏப். 26

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தல் தொடர்பில் இதுவரை மார்ச் 20 முதல் நேற்றுமுன்தினம் வரை 2 ஆயிரத்து 623 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 13 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 2 ஆயிரத்து 421 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 189 முறைப்பாடுகளும் கிடைத் துள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.